


04.10.2026

தலைப்புச் செய்திகள்

- வளர்ச்சி அடைந்த பாரத பாதையில் சிறு, குறு, நடுத்தர, ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக குடியரசு துணை தலைவர் திரு. சி. பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.
- இந்திய - அமெரிக்க பாதுகாப்பு ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்தப்படும் என வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் கூறியுள்ளார்.
- மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தல் பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.
- தமிழ்நாட்டில் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் தரமான குடியிருப்புகள் கட்டப்படுவதன் அவசியத்தை மாநில அமைச்சர் திரு. வெங்கடரமணன் வலியுறுத்தியுள்ளார்.
- ஆசிய விளையாட்டு போட்டியின் நிறைவு விழாவில் இந்தியாவின் துப்பாக்கி சுடும் வீராங்கனை நீரு தாண்டா மூவர்ண கொடியை ஏந்தி செல்கிறார்.

இனி விரிவான செய்திகள்

***********

சி.பி.ராதாகிருஷ்ணன்

வளர்ச்சி அடைந்த பாரதத்தில் சிறு குறு நடுத்தர மற்றும் ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற 58 ஆவது இந்திய நிறுவன செயலாளர்கள் கூட்டத்தில் உரையாற்றிய அவர், நாட்டின் வளர்ச்சிக்கு முதலீட்டாளர்களின் நம்பிக்கையை பெருவதன் அவசியத்தை சுட்டிக்காட்டினார்.

உலக அளவில் மிக விரைவான பொருளாதார வளர்ச்சி கண்டு வரும் அதே வேளையில் விரைவான தொழில்நுட்ப மேம்பாடுகளையும் இந்தியா பயன்படுத்தி வருவதை குடியரசு துணை தலைவர் சுட்டிக்காட்டினார்.

நிறுவனங்களின் நல் ஆளுமையுடன் சுய சார்பு இந்தியாவை உருவாக்கி உலகளாவிய தனிப்பெரும் பொருளாதார சக்தியாக மேம்படுத்துவதில் நிறுவன செயலாளர்களின் பங்கு வழிகோலுவதாக கூறினார்.

***********

ஜெய்சங்கர்

இந்திய அமெரிக்க பாதுகாப்பு ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்தப்படும் என மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

சமூகவலைளத்தில் அவர் வெளியிட்ட செய்தியில் இரு நாடுகளுக்கிடையே கடல்சார் ஒருங்கிணைப்பு மற்றும் இந்தோ

பசிபிக் பிராந்தியத்தில் பாதுகாப்பை அதிகரிக்கும் நடவடிக்கைகள் குறித்து அமெரிக்க இந்தோ பசிபிக் கமாண்டர் அட்மிரல் சாமுவேல் பாப்பரோவுடன் தாம் ஆலோசனை மேற்கொண்டதாக கூறினார்.

***********

பெஞ்சமின் நேத்தன்யாஹு

பிரதமர் திரு.நரேந்திரமோடி மற்றும் இந்திய விமானி கேப்டன் ஸ்மித் மச்சாரை இஸ்ரேல் சுதந்திர தின கொண்டாட்டங்களில் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்க, அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நேத்தன்யாஹு அழைப்பு விடுத்துள்ளார்.

ஸ்மித் மச்சாருடன் தொலைபேசியில் உரையாடிய அவர், ஃபிளை துபாய் விமானத்தில் சக விமானியின் தாக்குதலை முறியடித்து எண்ணற்ற உயிர்களை காப்பாற்றிய அவரின் துணிச்சல் மற்றும் அர்ப்பணிப்பை பாராட்டும் வகையில் இந்த கவுரவம் வழங்கப்படுவதாக கூறினார்.

***********

பூபேந்தர் யாதவ்

கடற்பறவை இனங்களை மீட்டெடுப்பதன் மூலம் பறவைகளின் வாழ்விட மேலாண்மை, மறுசீரமைப்பு பாதுகாப்பான இனப்பெருக்கம், உள்ளிட்டவைகளை மேம்படுத்த முடியும் என மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.பூபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சல்மர் சாம் பாலைவன தேசிய பூங்காவில் இன்று இரண்டு கான மயில்களை விடுவித்து பேசிய

அவர், அழிவின் விளிம்பில் இருக்கும் வன உயிரினங்களை பாதுகாப்பதில் பிரதமர் திரு.நரேந்திரமோடி கூடுதல் கவனம் செலுத்தி வருவதை சுட்டிக்காட்டினார்.

விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், அலுவலர்கள் உட்பட அனைத்து தரப்பினரின் சீரிய முயற்சியால் இப்பறவை இனங்கள் காப்பாற்றப்பட்டு வருவதை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

***********

PM SETU திட்டம்

பிரதமரின் திறன் மேம்பாடு தொழில்முனைவோர் திட்டத்தின் கீழ் நாடுமுழுவதும் இளையோர்களுக்கு திறன் பயிற்சி வழங்க 60 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

PM SETU திட்டம் தொடங்கப்பட்டு இன்றுடன் ஒராண்டு நிறைவடையும் நிலையில் தொழிற்சாலை சார்ந்த ஆளுமை, கட்டமைப்பு பயிற்சி மேம்பாடு உள்ளிட்டவற்றின் மூலம் இளையோர்களின் திறன்களை கண்டறிந்து அவர்களை தொழில்முனைவோராக்கும் நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

***********

திருப்பூர் குமரன்

சுதந்திர போராட்ட வீரர் திருப்பூர் குமரனின் 123-வது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி குடியரசு துணைத்தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் வெளியிட்ட செய்தியில் கொடிகாத்த

குமரனின் தன்னலமற்ற தியாகமும் தேசப்பற்றும் வருங்கால தலைமுறையினருக்கு உத்வேகம் அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

ஆங்கிலேயர்களுக்கு எதிரான சட்டமறுப்பு இயக்கத்தில் பங்கேற்ற திருப்பூர் குமரன் காவலர்களால் தாக்கப்பட்டபோதும் தேசிய கொடியை கையில் ஏந்தியவாறே உயிர் நீத்ததையடுத்து டிகாத்த குமரன் என அழைப்படுகிறார்.

***********

சுப்ரமணியசிவா

விடுதலை போராட்ட வீரர் தியாகி சுப்ரமணியசிவாவின் 143-வது பிறந்த தினமும் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் வெளியிட்ட செய்தியில் சுப்பிரமணிய சிவாவின் வீரமிக்க உரைகள் மற்றும் எழுத்துக்கள் நாட்டு நலனுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்ற ஒவ்வொரு தலைமுறையினரையும் தொடர்ந்து ஊக்கவிப்பதாக தெரிவித்துள்ளார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் வெளியிட்டுள்ள செய்தியில் தேச விடுதலைக்கு அவர் ஆற்றிய அரும்பணிகளை போற்றுவோம் என்று கூறியுள்ளார்.

இந்நாளை ஒட்டி தர்மபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டியில் உள்ள அன்னாரது மணிமண்டபத்தில் அமைந்துள்ள நினைவிடத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சரவணன் இன்று மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தினார்.

***********

சேவா சங்கல்ப்

.. Music ..

பிரதமர் திரு.நரேந்திரமோடி 25 ஆண்டுகள் பொது வாழ்க்கையை நிறைவு செய்துள்ள நிலையில், வளர்ச்சி அடைந்த பாரத பாதை என்ற பிரதமரின் தொலைநோக்கு பயணத்தில், மக்கள் சேவை உறுதிமொழி இயக்கத்தின் ஒருபகுதியாக, ஆயுஷ்மான் பாரத் குறித்த செய்தி தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

.. Music ..

நாட்டின் சுகாதார பாதுகாப்பில் பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் மிக முக்கிய பங்காற்றுகிறது.

ஆண்டொன்றுக்கு 5 லட்சம் ரூபாய் வரையிலான உயர் சிகிச்சை செலவினங்களை மத்திய அரசே முழுமையாக ஏற்கும் வகையில் இந்த காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மருத்துவமனைகளில் 3 நாட்கள் முதல், சிகிச்சைக்கு பின்னர் 15 நாட்கள் வரையிலான செலவினங்கள் இந்த திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

தகுதியுடைய குடும்பங்களுக்கு, குடும்பத்தில் எத்தனை உறுப்பினர்கள் இருந்தாலும் பாலின பாகுபாடின்றி காப்பீட்டு பயன்களை பெற முடியும்.

குறிப்பாக 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள், வருமானம், சமூக பொருளாதார நிலைகளை தாண்டி

பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் சுகாதார காப்பீட்டு திட்டத்தின் கீழ் பயனடைந்து வருவது இதன் சிறப்பம்சமாகும்.

ஆயுஷ்மான் பாரத் சுகாதார காப்பீடு திட்டம் மூத்த குடிமக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் பயனளிப்பதாக திருச்சி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையின் டீன் டாக்டர் குமாரவேல் தெரிவிக்கையில்

வாய்ஸ்

.. Music ..

***********

பிரச்சாரம்

மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தல் பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைய உள்ள நிலையில் அரசியல் கட்சி தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

த.வெ.க தலைவரும் முதலமைச்சருமான திரு.ஜோசப் விஜய் தாராபுரத்தில் தமது கட்சி வேட்பாளரை ஆதரித்து சாலை பேரணியில் ஈடுபட்டுள்ளார்.

முன்னதாக மதுராந்தக தேர்தல் பிரச்சாரத்தில் உரையாற்றிய திமுக தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என குற்றம் சாட்டினார்.

அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் ஒரு மூட்டைக்கு 70 ரூபாய் வழங்கும் நிலை தற்போது

ஏற்பட்டுள்ளதாக அஇஅதிமுக பொது செயலாளார் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி குறை கூறியுள்ளார்.

இவ்விரு தொகுதிகளிலும் நாளைமறுநாள் வாக்குப்பதிவு நடைபெற்று வரும் 9ஆம் தேதி வாக்குகள் எண்ணப்படுகின்றன.

இதனிடையே வாக்காளர்களுக்கு பணம், பரிசுபொருட்கள் வழங்குவது உள்ளிட்ட விதி மீறல்களை தடுக்க தேர்தல் பறக்கும் படையினர் தீவிர சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இத்தொகுதிகளில் உள்ள வாக்காளர் அல்லாதோர் இன்றுமாலைக்குள் வெளியேறுமாறும் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

இப்பகுதிகளில் இன்றுமுதல் 3 நாட்களுக்கு அனைத்து மதுபான கடைகளை மூடவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனிடையே மதுராந்தகம் தனி தொகுதியில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் முழுமையாக பின்பற்றப்படுவதை அதிகாரிகள் உறுதி செய்து வருவதாக எமது செங்கல்பட்டு செய்தியாளர் தெரிவிக்கிறார்.

----வாய்ஸ்---

***********

வெங்கடரமணன்

தமிழகத்தில் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் தரமான குடியிருப்புகள் கட்டப்படுவதன் அவசியத்தை மாநில உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.வெங்கடரமணன் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில், சென்னை மயிலாப்பூர் ஆன்டிமானியம் தோட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடியிருப்பு கட்டுமான பணிகளை ஆய்வு செய்த அவர், அடுத்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் இப்பணிகள் முடிக்கப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைக்கப்படும் என்றார்.

118 கோடியே 53 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் 702 அடுக்குமாடி குடியிருப்பில் பயனாளிகளின் தேவைகளை கருத்தில் கொண்டு அனைத்து அடிப்படை வசதிகளும் முறையாக ஏற்படுத்தப்பட வேண்டும் என அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

***********

நவராத்திரி

நவராத்திரி விழாவை ஒட்டி காஞ்சிபுரத்தில் கொலு பொம்மை விற்பனை விறு விறுப்பாக நடைபெற்று வருகிறது.

அஸ்தகிரியில் 50க்கும் மேற்பட்ட குடும்பத்தை சேர்ந்த கைவினை கலைஞர்கள் கொலு பொம்மை தயாரிப்பில் தீவிரம் காட்டி வரும் நிலையில் இப்பொம்மைகள் மிகுந்த கலை நயத்துடன் திகழ்வதாக நுகர்வோர் தெரிவிக்கையில்

வாய்ஸ்

***********

இருவரி

நாகை மாவட்டம் வேதாரண்யத்தை அடுத்த பால சமுத்திர புல குளத்தில் மழைக்கால பேரிடர் மீட்பு ஒத்திகை நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

தலைஞாயிறு தீயணைப்பு துறையினர் மற்றும் பேரிடர் மீட்பு குழுவினர் பங்கேற்ற இந்நிகழ்ச்சியில் பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் மீட்பு பணிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

ராணிப்பேட்டை மாவட்டத்தில் விவசாயிகள் வேளாண் அடுக்கு திட்டத்தில் பதிவு செய்வதற்கான சிறப்புமுகாம் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகங்களில் வரும் 5 ஆம் தேதிமுதல் 31ஆம் தேதிவரை நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி பிரியா ரவிசந்திரன் தெரிவித்துள்ளார்.

காலாண்டு விடுமுறையை ஒட்டி சேலம் மாவட்டம் பூலாம்பட்டி படகு துறையில் இன்று ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்துள்ளதால் காவல்துறையினர் கூடுதல் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையத்தில் சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

இதில் தலைகவசம் அணியாத வாகன ஓட்டிகளுக்கு காவல்துறையினர் அறிவுரை வழங்கியதோடு, தலைகவசம் அணிந்தவர்களுக்கு பரிசு பொருட்கள் வழங்கி ஊக்கப்படுத்தினர்.

ஈரோட்டில் போதை பொருள் ஒழிப்பு, குழந்தை திருமணம் தடுப்பு, மலை வாழ் மக்களின் நலன் குறித்த விழிப்புணர்வு மாரத்தான் இன்று நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***********

ஆசிய விளையாட்டு

ஆசிய விளையாட்டு போட்டிகள் இன்றுடன் நிறைவடைகின்றன.

ஜப்பான் நகோயாவில் நடைபெறும் நிறைவு விழாவில் துப்பாக்கி சுடும் வீராங்கனை நீரு தாண்டா மூவர்ண கொடியை ஏந்தி இந்திய அணியை வழிநடத்தி செல்வார்.

இந்நிகழ்ச்சியின்போது வரும் 2030ஆம் ஆண்டு தோஹாவில் நடைபெற உள்ள ஆசிய விளையாட்டு போட்டிக்கான நடைமுறைகள் முறைப்படி ஒப்படைக்கப்படும்.

21 தங்கம், 27 வெள்ளி, 37 வெண்கலம் உட்பட 85 பதக்கங்களுடன் பதக்க பட்டியலில் இந்தியா 4ஆவது இடத்தில் உள்ளது.

***********

கிரிக்கெட்

இந்திய - வெஸ்ட் இண்டிஸ் அணிகளுக்கிடையிலான முதலாவது 20-20 கிரிக்கெட் போட்டி நாளை மறுநாள் லக்னோவில் நடைபெறுகிறது.

***********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது